September 1911. Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது ஸ்ரீ புரட்டாசி-மீ 1-உ [பகுதி -6.

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| தமிழ்நாடும் பத்திரிகைகளும் | 121 |
| திருப்பெருந்துறை விளக்கம் | 123 |
| கோபத்தைக் கொல்வதே குணம் | 127 |
| கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி | 132 |
| ஐயவினா | 135 |
| தமிழ்மறை யுணர்த்துவன. | 135 |
| மனோகரன். | 137 |
| மாணிக்கஜோதி. | 138 |
| சுகாதாரம். | 140 |
| கல்வியறிவில்லாப் பெண்மணிகளின் குடும்பவாழ்க்கை. | 142 |
| எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் மாணவர் தமிழ்ச்சங்கம். | 143 |
| உருது அஞ்சுமன். | 144 |
| சமாச்சாரக் குறிப்புகள். | 144 |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை,
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.
Copy Right Registered.
வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

லெக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0.

# செந்தமிழ்ச் செல்வம்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-1.] விரோதிக்ருது௵ புரட்டாசி-மீ ௧-௳ [பகுதி-6.

### தமிழ் நாடும் பத்திரிகைகளும்.

தமிழ்நாட்டின் இனிமை கண்ட வருணன், அடுத்தடுத்து வந்து எடுத்துவாய் மடுத்துச் சுவைத்துப் பலபெரும் பரப்புத்தமிழ் நிலத்தை விழுங்கி ஒரு சிறு அளவு நிலத்தையே எஞ்ச வைத்திருக்கின்றான்.

இப்பொழுது தமிழ் நாடு என்பவைகள் இந்தியாவின் தென் கடைப்பாகமாகிய தென் ஆற்காடு ஜில்லா, சேலம் ஜில்லா, தஞ்சாவூர் ஜில்லா, திருச்சினாப்பள்ளி ஜில்லா, மதுரை ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா என்னும் இவைகளே.

இவைகளையும் வருணன் விட்டபாடில்லை; எப்பொழுது சமயம் வாய்க்கும்விழுங்கிவிடலாமென்று திரைக்கரங்களால் தொட்டுத்தொட்டுப் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.

இது இப்படியிருக்க, அழகிய பூவைப் புழுவரித்ததுபோலப் பல பாஷை மன்னர் படையெடுத்துக்குடி புகுந்து ஒட்டைப்படுத்திக் கேட்டைச் சூழ்ந்துவிட்டனர்.

இது நிற்க, இப்பொழுது(கருணைமிக்க ஆங்கில அரசர்காலத்தில்) நமது தமிழ் மொழி பரவிச் செழித்தோங்கப் பல வழிகள் இருக்கின்றன. நமது நன்மையையே தமது நன்மையாகவும் நாம் சுகமாக இருத்தலையே தாஞ்சுகமாக இருத்தலாகவுங்கருதும் கண்ணளி நிறைந்த நுண்ணறிவுடைய விறல் மன்னராகிய ஆங்கிலரும் அமிழ்தினுமினிய தமிழ் மொழி முன்னிருந்த நிலையாகிய நன்னிலையையடைய ஆன முயற்சிகளை அடைவுடனே செய்துவருகின்றனர்.

நம்மவரோ தமிழை வெறுத்துத் தமிழ் நாட்டினிடத்து அபிமானத்தையும் அறுத்து தமிழ் நாட்டாசாரங்களைக்கறுத்து (கோபித்து) இகழ்ந்து நிற்கின்றனர்.

'தமிழ்' என்ற சொல்லை எடுத்தால் அவர்கள் செவித்துளையில் நாராசத்தைக் காய்ச்சிவிட்டதுபோல் வேதனைப்படுகின்றனர். தமிழ்ச் சொல்லைப் பேசுவதென்றால் வேப்பங்கட்டியை உண்பவர்போல் தலை நடுக்குகின்றனர்.

இப்படியும் பாஷாபிமானங்குன்றி யிருக்கலாமா? இதுவும் விபரீதமே.

ஒருதேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் பத்திரிகைகள் மிக முக்கியமென்பதும் முன்னுக்குவந்த தேசங்களிலெல்லாம் பத்திரிகைகள் மிகுதியாக உலவுகின்றன என்பதும் யாவரும் அறிந்ததே.

சிறிய தேசமாகிய ஜப்பானில் 4000 பத்திரிகைகள் நடைபெறுகின்றனவாம். இந்த விதமான கல்வி விருப்பமும் ஒற்றுமையுணர்ச்சியும் தேசாபிமானமும் பாஷாபிமானமுமே, ஜப்பானை வெகு சீக்கிரம் முன்னுக்குக் கொண்டுவந்தது.

இதுபோல நமது நாட்டிற்கு எப்பொழுது வருமோ அறியேம்!

தமிழ் மக்களெல்லாம் ஆங்கிலேயராகப்போக முயன்று கொண்டிருக்கின்றனர். ஐயோ! நாம் இந்தியாவில் ஏன் பிறந்தோம் ஐரோப்பாவில் பிறந்திருக்கக்கூடாதா என்று நினைப்போர் பலர்.

நமது நாட்டுப் பழக்க வழக்கங்களை இகழ்ந்து தள்ளி மேலைநாட்டுப் பழக்க வழக்கங்களைப் புகழ்ந்து போற்றின் நம்மைச்சீமைத்துரை என்பர் என வேஷம் போடவும் தமிழினிடத்துத் துவேஷங் காட்டவும் ஆரம்பித்து விட்டனர்.

இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் கணக்கு மிகமிகக் குறைந்திருக்கின்றது. பிறந்துள்ள பத்திரிகைகளும் போற்றுவாரின்றி இறந்துகொண்டே வருகின்றன. இப்படிப் பத்திரிகைகள் அற்ப ஆயுசுபெற்று அழிவதற்குக் காரணம் தமிழர்கள் தமிழினிடத்து அபிமானம் வைக்காததின் காரணமேயாம்.

இது மட்டுமோ? நமது தமிழ் நாட்டில் தமிழ்மொழிச் சம்பந்தத்தோடு பத்திரிகைகள் தோன்றுவது குதிரைக்கொம்பாக இருக்கிறது. அப்படியாக ஒன்றிரண்டு தோன்றினும் போற்றுவாரின்றி மாய்கின்றது. பாங்காகக் கட்டின வீட்டிற்குக் குறை சொல்வதுபோல இரண்டு சொல் சேர்த்துப் பிழையின்றிப் பேசவும் எழுதவுந் தெரியாதாரும் குற்றங் கூற முன் வந்துவிடுகின்றனர்.

செல்வவான்கள் கள்ளுக்குஞ் சுள்ளுக்குஞ் செலவிடமுன் வருகின்றனர். இதுபோன்ற காரியங்களுக்கு உள்ளடங்கி ஒளிக்கின்றனர்.

சந்தாதாரர்களோ பணங்கேட்கப் போங்கால் அசந்த மொழி பகர்கின்றனர். இவ்வித மிருப்பின் எப்படிப் பத்திரிகைகள் நமது நாட்டில்பலவாகிப் பல்கிப்பரவும்? எப்படி கல்வியும் நாகரீகமும் பரவும் எப்படி ஒற்றுமை உணர்ச்சி உண்டாகும்? தமிழ் நாட்டுக் கல்விமான்களே! செல்வவான்களே! நீங்கள் முன்வந்து வேலை செய்யாது உள்ளடங்கிக் கிடப்பின்நமது நாடு எப்படி முன்னுக்குவரும். நமது நாள் கழிந்தாற்போதும் யார் கெட்டாலென்ன யார் வாழ்ந்தாலென்ன நாம் கெடாதிருப்போம் என்று நினைத்திருத்தல் வேண்டாம். நம்மவர்கள் கெடுவது நாம் கெடுவதே. பொது நலத்திற்குப் பாடுபடுதலே உங்கள்

கடன்மையாகக் கொள்ளுமின் நுமக்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனும் தப்பாது கிட்டும். கடைசியில் ஈறிலாமுத்திப் பேறடைவீர், இன்றேன் தமிழகத்தின் சாயஞ் சித்திக்குமென்பது சத்தியமே.

பத்திராதிபர்.

## திருப்பெருந்துறை விளக்கம்.

க-வது, மாணிக்கவாசக சுவாமிகள் காலமுந் திருத்தொண்டத் தொகையில் "பொய்யடிமை யில்லாத புலவர்" இன்னாரென்பதும்,

தமிழ்ச் சிலாசாஸன சபையாரென்று பொருள் படுஞ் (The Tamilian Archaeological Society) சங்கத்தார், தமிழின் பூர்வம் (The Tamilian Antiquary) என்றபெயரால் பிரசுரஞ்செய்துவருஞ் சஞ்சிகைகளில் 1909 வருடத்தில் வெளியிட்டிருக்கும் 4வது இலக்க மிட்ட ஆங்கிலேய பாஷா சஞ்சிகையில் மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சியென்று ஓர் வியாசம் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. இவ்வியாசமெழுதியவர்கள் இருவர். மகா-ள-ள-ஸ்ரீ சேஷய்யரவர்கள் B.A., B.L., மாணிக்கவாசகசுவாமிகளையும் அவர்கள் காலத்தையுங் குறித்தெழுதி யிருக்கிறார்கள். மகா-ள-ள-ஸ்ரீபொன்னம் பலம்பிள்ளை யவர்கள் "மாணிக்கவாசக சுவாமிகளும் மலையாள நாட்டு (Malabar)ப்பூர்விக கிறிஸ்தவர்களும்" என்ற ஆராய்ச்சி எழுதியிருக்கிறார்கள். இவர்கள் கொண்ட வபிப்பிராயங்களிற் பல புராதீன நூலுக்கும், யுக்திக்கும், அநுபவத்திற்கு மொவ்வா திருத்தலா லவைகளைப் பலருமறியும் வண்ணஞ் சில வரையலுற்றேன், எழுத்துப் பிழை சொற்பிழை முதலிய்வற்றைக் கவனியாமற் பொருளை மட்டும் நாட வேண்டுமாய்த் தமிழ்ப் பண்டிதர்களையுஞ் சைவ மதாபிமானிகளையுங் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதலில் ஐயரவர்கள் ஆராய்ச்சியைக் கவனிப்பாம். மாணிக்க வாசக சுவாமிகள் காலம் சைவசமயாசாரியர்களாகிய திருஞான சம்பந்தர் முதலிய மூவர்காலத்துக்கும் பிற்பட்டதென்று தமக்குத்தோற்றின சில அபிப்பிராயங்களைக் கொண்டு சிலாசாஸனபரிசோதகராகிய மகா-ள-ள-ஸ்ரீ கோபிநாத ராவு அவர்கள் ஊகிக்கிறார்கள். அது விஷயமாயவர்களெழுதி யிருப்பது எனக்குக் கிடைக்காததினால் ராவு அவர்கள் கருத்தைப் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ள அசக்தனாயிருக்கிறேன். ஐயரவர்கள் மாணிக்கவாசக சுவாமிகள் காலம் மூவர் முதலிகளுக்கும் முற்பட்டதென்பதை ஸ்தாபித்து அதற்கு ஆதாரமாகச்சில வெழுதியிருக்கிறார்கள். மூவர் முதலிகளுக்கும் முற்பட்ட காலமே மாணிக்கவாசக சுவாமிகள் காலமென்பதனோடு நானும் ஒன்று படுகின்றேன். ஆனாலதற்குத் தேடியிருக்குஞ் சில ஆதாரம் அநுதா

மென்பதை யீண்டு காட்டுகிறேன். மூவர்களி லொருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாமருளிச்செய்த திருத்தொண்டத்தொகையில் மாணிக்கவாசக சுவாமிகளைச் சேர்த்திராததுவே இவர்கள் காலம் மூவர் முதலிகளுக்கும் பிற்பட்டதென்பது ராவு அவர்கள் சொல்லும் காரணங்களிலொன்று. சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முற்பட்டவர்களும் திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்தவர்களுமான அப்பர் சுவாமிகள், தாமருளிச்செய்த தேவாரப் பதிகங்களில் பலவிடங்களில் மாணிக்கவாசக சுவாமிகளையும் அவர்கள் விஷயமாய்க் கடவுள் செய்த லீலைகளையுமெடுத்துப் புகழ்ந்திருக்கிறார்கள். அவைகள் வருமாறு "நரியைக் குதிரை செய்வானும்" என்பதும் "குடமுழ நந்தீசனை மணிவாசகனுக் கொண்டார்" என்பதும் "மணியார்வையைத் திருக்கோட்டினின்றதோர் திறமுந்தோன்றும்" என்பதுமே. இவைகளை ஐயரவர்களெடுத்துக் காட்டி மிக்க திறமையாய் ராவு அவர்கள் கொள்கையை மறுத்திருப்பது சைவசமயிகள் பல்லோருக்கும் ஆனந்தத்தை விளைக்கிறது. நந்திகேஸ்வரரே மாணிக்கவாசக சுவாமிகளாக அவதாரமானதாய் வடமொழி ஆதி கைலாச மான்மிய மென்னுந் திருப்பெருந்துறை மகாத்மியம். மணிவாசக தீபிகை, யிவைகளிலும் விவரித்துக் கூறியிருப்பதாயுந் தமிழாராய்ச்சியில் மிக்க தேர்ச்சியுற்ற பாரபட்சமிலாத சென்னை இராஜதானி சகல கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் புலவர் மகா மகோபாத்தியாயர் ஸ்ரீபிரம்மஸ்ரீ.வே. சுவாமிநாத ஐயரவர்கள் தாம் பதிப்பித்த நம்பியார் திருவிளையாடற் புராணத்தில், மாணிக்கவாசக சுவாமிகள் கால ஆராய்ச்சி யென்றதிலெழுதியிருக்கிறார்கள். தமிழ்த் திருப்பெருந்துறைப் புராணம் திருவாதவூரர் அவதாரப் படலம், 39, 40. 41, செய்யுட்களிலு மிக்கருத்தே யிருக்கிறது. இது நிற்க திருத்தொண்டத் தொகையில் பெயர் குறிப்பிட்டிராத சிவனடியார்களெத்தனையோ பேர்கள் ஒவ்வொரு தலப்புராண சரித்திரப்படியிருந்திருக்கிறார்கள். கண்ணப்பசுவாமிகள் காலத்தவரும் கண்ணப்ப சுவாமிகள் பக்தியின் வலிமையை யுலகினர்க்குக் காட்டக் காரணராயிருந்தவருமான சிவகோசரியார், சுந்தரமூர்த்தி சுவாமிகளே தமது தேவாரத்தில் அடிக்கடி எடுத்துப் புகழும் மார்க்கண்டேய முநிவர், இவர்களை யேன் திருத்தொண்டத் தொகையில் சேர்த்திருக்கவில்லை?

திருவருள் விளக்கினபடி, திருவாரூர் தேவாசிரிய மண்டபத்திற் றமக்குக் காணப்பட்ட தொண்டர்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோத்திரஞ் செய்திருப்பதுடன், திருத்தொண்டத் தொகை யென்னுந்திரு நாமத்துக்கிணங்க, அப்பிரபந்தத்தில் தோத்தரிக்கப்பட்ட தனியடியார்களை யொழிந்த எஞ்சி நின்ற முக்காலத்து அடியார்களுக்குந் தம் வணக்கமடையுமாறு "அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்குமடியேன்" எனவும் மிக்க விநயமாய்த் தோத்திரஞ் செய்திருக்கி

றார்கள். இந்நலம் மிக்க வியக்கத்தக்கதே. சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்துக்கு வெகு காலத்துக்கு முந்தியது மாணிக்கவாசக சுவாமிகள் காலமானதால் இத்தொகை யடியார் கூட்டத்திலொருவராக மாணிக்கவாசக சுவாமிக ளெண்ணப்பட வேண்டியவர்களாகவிருக்கிறார்கள் தனித்துத் தோத்திரஞ்செய்யாததினாற் பாதகமென்னை? மாணிக்கவாசகசுவாமிகள் காலம் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முற்பட்டதென்பதை யித்தியாதி காரணங்களினாற் ரூபிப்பதே போதுமானதாயிருக்க நமது ஐயரவர்கள் வேறு சில நவீன கற்பனைகளை யுக்திவாதமாகச் சொல்லுகிறார்கள். அக் கற்பனைக ளின்னதென்பதையும் அவை பொருத்தமற்றவைகளென்பதையுந் தெரிவிக்கிறேன். திருத்தொண்டத் தொகையிலும் மாணிக்கவாசக சுவாமிகளைத் தனியடியாராகச் சேர்த்திருப்பதாயும் "பொய் யடிமையில்லாத புலவர்க்கு மடியே" னென்று தோத்தரிக்கப்பட்ட சொற்றொடர்பு மாணிக்க வாசக சுவாமிகளைக்குறிக்கிறதென்றும் ஐயரவர்கள் சொல்லுகிறார்கள். இக்கூற்றுப் பிழையானதினா லிப்பிழையைத் தாபிக்கவனேக கற்பனாதாரங்களைத் தேடி யிருக்கிறார்கள். திருத்தொண்டத் தொகைக்கு வகை நூலருளிச்செய்த நம்பியாண்டார் நம்பிபேரிலும் பிழை யேற்றுகிறார்கள். விரி நூலருளிச்செய்த சேக்கிழார் சுவாமிகளுக்கும் பிழையில் பாகமளிக்கிறார்கள். தொன்று தொட்டு சைவ சமயிகளாகிய தமிழர்கள் தொகை, வகை, விரி யென்ற திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பி கலித்துறை யந்தாதி, பெரிய புராணம், ஆகிய மூவகை நூல்களையுந் திருவருட்டுணையாற் கிடைத்த நூல்களென்று சத்தியமாய் நம்பியு மோதியும் வருகிறார்கள், வகை, விரி, நூல்கள் சுமார் ௲ வருடத்துக்கு முற்பட்டதே. இவைகளில் பொய்யடிமை யில்லாத புலவரென்போர். கடைச் சங்கமேறின சங்கப்புலவர் 49 ன்மரென்று தெரிவித்திருக்கிறது. நம்பியடிகளருளிச்செய்த ஷை கலித்துறை யந்தாதி 87-வது திருப்பாட்டில் "சுந்தரமூர்த்திசுவாமிகள் தாமருளிச்செய்த திருத்தொண்டத் தொகையில் தனியடியார்கள் 63, தொகையடியார்கள் 9, ஆக 72, அடியார்களென்று கணக்கிட்டிருப்பதாயுந்" திருத்தொண்டத்தொகை பாசுரங்களிற் றோத்தரிக்கப்படுந் தனியடியார்களைக் கணக்கிட்டால் 62 தானேற்படுகிறதென்றும் "பொய்யடிமையில்லாத புலவர்" என்பதைத் தங் கருத்துப்படி மாணிக்கவாசக சுவாமிகளாக வைத்துக்கொண்டால் 63 சரியாயிருக்கிறதென்றும் ஐயரவர்கள் கூறுகிறார்கள். இக்கூற்று குல்லாவுக்குத் தக்கதலை செய்தது போலாகிறது. அப்படிக் காணால் தொகையடியார் கணக்கு 9ல் ஒன்று குறையுமே யென்கிற வினாவை ஐயரவர்களே யெழுப்பிக்கொண்டு அதற்குச் சமாதானம் சொல்ல வகை காணாததினால் நம்பியாண்டார் நம்பிகள் தவறிப் போனதாக அவர்கள் பேரிற்குறை கூறுகிறார்கள். ஷை கலித்துறை அந்தாதி 87 வது செய்யுள் வருமாறு:—

"கூட்டமொன்பானோடறுபத்துமூன்று தனிப்பெயரா
யீட்டும் பெருந்தவத்தோரெழுபத்திரண்டாம், வினையை
வாட்டுந்திருத்தொண்டத்தொகைபதினொன்றின்வகைப்
பாட்டுந்திகழ் திருநாவலூராளி பணித்தனனே." என்பதே

இச்செய்யுளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனியடியார் 63 என்று கணக்கிட்டிருப்பதாக நம்பியாண்டார் கூறியிருப்பதாகக் காணப்படவில்லை. தொகையடியார் 9 தனியடியார் 63 ஆக சிவனடியார் 72 ஆவர் என்று நம்பியாண்டார் நம்பி சொல்லுகிறார்கள். பின்னிரண்டடியில்சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை 11பாசுரமாக வருளிச்செய்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. திருத்தொண்டத்தொகை கடைசிப் பாசுரத்தின் 4 வது அடியில், "என்னவனுமரனடியே யடைந்திட்ட சடையன்" (க) "இசைஞானி" (உ) யென்று திருவாய் மலர்ந்து (இவர்கள்) "காதலன்றிரு நாவலூர்க்கோனென்" று (ந) தம்மையுஞ் சுந்தரமூர்த்திசுவாமிகள் பிரித்துச்சொல்லி "அன்னவனுமாரூரனடிமை கேட்டுவப்பாரே"ன்று தம்மைப் படர்க்கையிடத்தில் வைத்திருக்கும் நயம் மிக்க நுட்பமாயாராயக் கூடியதாயிருக்கிறது. இந்நயத்தையறிந்த நம்பியாண்டார் சுந்தரமூர்த்தி சுவாமிகளையுமொரு தனியடியாராகச் சேர்த்துத் தனியடியார் 63 என்று மேல் 87வது அந்தாதிச் செய்யுளில், திருத்தொண்டார் அறுபத்துமுவரொன்று தமிழுலக மொப்புமாறு கணக்கிட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அறுபத்துமூவரிற் சேரவில்லையென்றால் யார் தான் ஒப்புவார்கள்?

இவ்விஷயத்தில் இன்னமுமையப்பாடெய்தாவண்ணம் பின்னுஞ் சிலவரைகிறேன். காலவளவு நிச்சயமாய்த்தெரிகிற இற்றைக்கு 597 வருடங்களுக்கு முந்தின மூர்த்திகளுஞ் சாந்தனுசாரிய சுவாமிகளிலொருவருமாகிய உமாபதி சிவமியற்றிய சேக்கிழார்நாயனார் புராணம் 52 வது செய்யுள் வருமாறு:—

"அறுபதுபேர் தனித்திருப்போர் திருக்கூட்ட மொன்பதாக வறுபத்தொன்பதானடியார் கதையை, மறுவிறிருநாவலூர்ச் சிவமறையோர் குலத்து வரு சடையனார் மனைவி யிசைஞானி வயிற்றி, லுறுதி பெற வவதரித்தவராரூர் முன்னுரைசெய்த திருத்தொண்டத்தொகைப் பதிகத் தடைவே, நறைமலி பூம்பொழில் புடை சூழ்திரு நாரையூரினம்பியாண்டார் திருவந்தாதி கடைப் பிடித்து." என்பதில் சடையனார் இசைஞானியார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இம்மூவரொழிந்த வெஞ்சியதனியடியார்கள் 60 பேரென்றும் தொகையடியார்கள் 9ன்மரென்னுந் திருத்தொண்டத் தொகைப்பதிகத் தடைவே நம்பியடிகள் வகுத்த திருத்தொண்டத் தொகையை ஆதாரமாக்கொண்டு சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணமியற்றியதாக மேற் செய்யுள் விளக்குகிறது. மேற் செய்யுளில் குறித்த 60 தனியடியார்கள் பேர்

களையும் 9 தொகையடியார் பேர்களையும் சேக்கிழார் புராணத்தில் 52 வது செய்யுளுக்கு முற்பட்ட செய்யுட்களில் தெரிவித்திருக்கிறது அந்த 60 தனியடியார்களுடன் சடையனார் இசை ஞானியார் சுந்தரப் பெருமாள் இம்மூவர்களையுஞ் சேர்த்தால் அறுபத்து மூன்று நாயன் மார் இன்னாரென்று விளங்குகிறது. சுமார் 120 வருடங்களுக்கு முன்னவதரித்த திராவிட மகா பாஷ்ய கர்த்தரான திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ சிவஞானமுனிகளருளிச் செய்த திருத்தொண்டர் திரு நாமக்கோவையிலும், சுந்தரமூர்த்திசுவாமிகளையுஞ் சேர்த்து 63 தனி யடியார்களைத் தோத்திரஞ் செய்திருக்கிறது. யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களும் தாமியற்றிய பெரிய புராணவசனருடப் புத் தகத்தில் "உண்மை நாயன்மார்" என்ற தலைப்பின் கீழ் 63 நாயன் மார்களுளொருவராய்த் திரு "வவதாரஞ்செய்து மற்றைய நாயன்மா ரைத துதித்துத் திருத்தொண்டத் தொகை பாடியருளினவர் ஆலால சுந்தரரே" யென்று மிக்க தெளிவாய் முன்னோர்கள் கருத்தைத் தழு வி விவரித்திருக்கிறார்கள்.

பெரிய புராணத்துக்குரை செய்த ஆறுமுகத் தம்பிரான் சுவாமி கள், கருத்துமிதுவே. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் 63 தனியடி யார்களைத் தோத்தரித்திருப்பதாக வெங்காவது கூறியுள்ளார்களா? யாராவது முன்வந்து சொல்லட்டும். அல்லது சுந்தரமூர்த்திசுவாமி களைத் தவிர்த்து அறுபத்து மூன்று நாயன்மார்களுளொன்று யாரா வது சொல்லத் துணிவார்களா? இத்தியாதிகாரணங்களினால் சுந்தர மூர்த்தி சுவாமிகளைத்தனியடியாரோடு சேர்த்து நமது ஐயாவர்கள்

(இன்னும் வரும்)

திரு. சாம்பசிவம் பிள்ளை
(Retired Sub-Magistrate,)
திரிசிரபுரம்.

## கோபத்தைக்கொல்லுவதே குணம்.

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்." (குறள்)

எறும்பு கடையீருயுள்ள எவ்வகை யான்மாக்களிடத்திலும் இயல்பாயமைந்துள்ள தீக்குணங்கள் பலவற்றுள்ளும் "கோபம்" என் னும் குணம் மிகப்பொல்லாதது. கோபம், சினம், சீற்றம், வெகுளி, முனிவு முதலிய பல சொற்கள் ஒரே பொருளையும் குணத்தையும் குறிப்பனவாம். இக்கோபம் என்னுங் குணம் மற்றைக் காமம் முத லிய குணங்களைப்போலவே எவ்வகை யான்மாக்களிடத்தும் இயல் பாய் அமைந்துள்ளதாயினும், ஒரே அளவிலமையாது சில ஆன்மாக்

களிடத்துக் குறைந்தும், சில ஆன்மாக்களிடந்து நிறைந்தும் காணப் படும். இதற்குக்காரணம் யாதென்று ஆராயப்புகுந்தால் இடங்கொள் ளாது வளரும். ஏனெனில், அதன் காரணத்தை விசாரிக்கப்புகின் இக்கோபக் குணம் ஆன்மாவினிடத்தில் எப்போது வந்து பொருந்தி யது? பொருந்தக்காரணமென்ன? தானே பொருந்தியதா? வேறொருவ ரால் பொருத்தப்பட்டதா? ஏன் பொருந்தவேண்டும்? ஆன்மா எப் போதுண்டாயிற்று? அதன் இலக்கணமென்ன? என்பன வாதிய தத் துவ விகாரம் அளவிலடங்காது விரியுமாதலாலென்க. அவ்விரிவு பழ மையாயுள்ள ஒரு மதத்தைச்சார்ந்தே வெளிப்படுமாகையால் அதற்கு இப்பத்திரிகை யிடங்கொடாதென்றெண்ணி அதை அம்மட்டில் நிறுத் தி மேற் செல்வாம்.

கோபம் எல்லா மனிதர்கட்கும் எக்காலத்திலும் உளதாயினும், அது மிகுப்பதற் குரிய காரணம் நேர்ப்பட்டபோது வெளி நோக்கி யெழுந்தும் அக்காரணம் நேராதபோது தோன்றுமதுள் ளடங்கியு மிருக்கும். மனிதர் அடையும் எவ்வகைப் பெருந் துன்பங்களுக்கும் இக்கோபமே காரணமாகும் பகுத்தறிவாகிய துணைக்கருவியொன்று மனிதர்க்குக் கிடைத்திருப்பதால் எக்காலமும் வாய் மழுங்காத அக் கருவிபைக்கொண்டு அக்கோபமென்னுங் காழ்ப்பேறிய கருமரத்தை வெட்டிச் சாய்த்தல் கூடும். அப்படிச் சாய்ப்பது மிக அரிய செய லாகையால் பெரியோரென்று மதிக்கப்படுகிறதக்கார் சிலருக்கே அது சாத்தியமாம். அதுபற்றியே.

> செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார். (குறள்)

என்றார் பெரியாரும். இது அரிய செயலாயின தென்னெனில் மற்றைக் குணங்களைக் காட்டிலும் இக்கோபம் மிகக்கொடுமையுள்ள தாதலாலும் அதுமற்றனேக தீக்குணங்கட்கு மாதுருஸ்தானம் பெற் றதாதலாலும் இக்குணம் மேலெழும்போது எல்லாத் தத்துவங்களை யும் இயக்கி நடத்துகின்ற பேராற்றலுள்ள "பகுத்தறிவு" என்னும் சக்கரவர்த்தியைக்கூடத் தலையெடுக்க வொட்டாது ஏமாற்றிவிட்டு முறபடும் மூர்க்க முள்ளதாதலாலும் அதை யடக்குதல் அரியசெய லென்று கூறப்பட்டதென்க. இதுபற்றியே

> "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினம்" (நன்னெறி)

என்றார் பெரியார். இங்கு உள்ளமென்பது அறிவு. இக்கோப மென்னுங் கொடுங் குணத்தின் இயல்பையும், அது வெளிப்பட்டு வி ரிய இடங்கொடுத்திடின் அதனால் நமக்கும் பிறர்க்கும் விளையும் பெ ருங்கேடுகளையும் பிறவற்றையும் பகுத்தறிவு கொண்டு சாவதான மாய்ச் சிந்தித்தறிந்து அதனையடக்கும் வகையில் அடக்கமுயல்வாரெ வரோ அவரே பெரியவரெனப்பட்டு எல்லாத் துன்பங்களும் நீங்கி,

எல்லா இன்பங்களும் ஓங்க இனிது வாழ்வரென்க. அங்ஙனஞ்செய்ய முயலாது அக்கோபத்திற்கு உள்ளத்தை ஒப்பிட்டிருப்பவர் எல்லாச் சுகங்களையும் இழந்து எல்லாத் துன்பங்களையும் ஒருங்கெய்துவார். அவர் ஒருபோதும் துன்பத்தினின்று நீங்குவதில்லை. அதுபற்றியே,

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (குறள்)

என்றார் நாயனார். அதனால் நற்பயன் கருதுவார்க்கு மிகமுயன்றும் அடக்கியாளப்படவேண்டியது இக்கோபம். அதனால் "ஆறுவது சினம்" என்றார் அன்னையாரும்.

கோபத்தீயானது உள்ளே நின்றால் உன்னையும், வெளிப்படுமானால் பிறரையுஞ் சுடுமாதலால் இதனைத்தணிப்பது முக்கியமான காரியமென்பதுதோன்ற 'ஆறுவதுசினம்' என்றார். சினம்ஆறுவது என்னாமல் ஆறுவதுசினம் என்றது அதனை வாயினாற் சொல்லவும் அஞ்சி, முந்தி ஆறுவது என்று அதனைத் தணித்துக்கொண்டு பின்பு சினம் என்றார். சினம் உண்டாவதற்குக்காரணம் ஒருவனிடத் துளதாயிருப்பினும் அதனைச் செய்தல் தீதென்பது இதனாற் போந்தபொருள் இதற்குதாரணம்.

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும். (குறள்)

சினத்தைப்பேணின் தானுமின்புறுவான் தவமும் வளர்ந்தோங்கும் என்பதும், பேணாவிடின் தானுந்துன்புறுவான் தவமும் அழிந்துவிடும் என்பதுவுமாயிற்று. இதனைக் கொன்றைவேந்தனில்

"சினத்தைப் பேணிற்றவத்திற்கழகு"

என்றார்.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். (குறள்)

அந்தோ! இக்கொடுஞ்சினம் யாரிடத்திற் றங்கியதோ அவர்களுடைய குடும்பத்திற்குள்ள அச்சத்தை யாரே யெடுத்துரைப்பர்?

சினமுளோன் மனைமைந்தர்க ளவன்வெளிச் செல்லுந்
தினமெலாந் திருவிழவு கொண்டாடுவர் செல்லா
தினையன்றங்கு நாளிழவு கொண்டாடுவ ரிறப்பின்
மனையிலோர் பெருமணவிழா வந்தென மகிழ்வார்
(வே. நா. மு, நீதிநூல்.)

கோபமுண்டாயின் மனக்கலக்கமுண்டாகும்; மனக்கலக்கமுண்டானபோது அறிவு கெடும்; அறிவு கெடுமாயின் உயிர்கண்மேல் அருள் இல்லாது நீங்கும்; அருள் நீங்குமாயின் கொடிய துன்பஞ் செய்ய நேரிடும் ஆகையால் கோபத்தை அடக்கவேண்டும்.

நாவினினியி னயாிருக்கிற் பூமாது
நாவினிய நல்லோரு தண்ணுவரார்—நாவினினி
யாங்கடினமாகி லருடிருவுஞ் சேராமுன்
னுங்கே வருமரண மாம்

மென்மதுர வாக்கால் விருர்புந் சகங்கடின
வன்மொழியி னலிகழ மண்ணுலகர்—நன்மொழிசேர்
ஓதுதுயிலேதங் குதவியது கத்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று.

கோபமான வார்த்தைகளைப் பேசாது இனிமையான வசனம் வசனித்தால் எவ்வளவு விருப்பமுற்றுப் புகழ்வார்கள். கோபமானது பொறுமையை வெல்லுமோ? வெல்லாதெனக.

சத்தியத்தை வெல்லாத சத்தியந்தா னிப்பொறையை
மேத்திலே கோபமது வெல்லாது—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்.

கோபத்தைப்போல் மனிதர்களுக்குப் பெரிய நஷ்டத்தையும், அவமானத்தையும், துன்பத்தையுந் தரத்தக்கது வேறில்லை.

தாக்கநிமிவதிட்டர் சாபத்தாற்றப்முடல்விட்
டேக்கழற்றான்றே விரங்கேசா—நோக்கினல்
சொல்லாவிடத்துச்சினந்தீது சொல்லிடத்தும்
இல்லதனிற்றீயிற. (இரங்கேசவெண்பா.)

ஆதலால் ஒருவரிடத்துங் கோபமாகாதெனக் கண்டுகொள்க.

கோபத்திருல் உண்டான எட்டுத் துக்கங்களாவன:—கோள், துணிவு, துரோகம், பொறுமை பிறன்குணத்தைச் சகியாமை, ஒருவன் பொருளை அபகரித்தல், காரணமின்றி அடித்தல் திட்டுதல் ஆக எட்டு.

(மனுஸ்-7-ம் அத் 48)

அன்றியும், கோபம் மேலெழுந்தபோது அறிவு கீழ்ப்பட்டுமறைந்து போதலால் அச்சமயம் தான் செய்யுங்காரியத்தால் பின்னர் நேர்கின்ற பயன் இன்னதென்று சிறிதும் தோன்றாது அதனுல் பெருந்துன்பம் தரக்கூடிய தீச்செயல்களை அப்போது இயற்றிவிட்டுப்பிறகு அக்கோபம் நீங்கியவுடன் அறிவுதலைப்பட ஆராய்ந்து ஐயோ! இப்பாழுங் கோபத்திற்கு இடங்கொடுத்து யாது செய்தோம். அறைநொடியிலே அளவிறந்த கஷ்ட நஷ்டங்களைத் தேடிக்கொண்டோமே மறந்து செத்தேன் பிராணனே வாவென்றால் வருமா?

‘ஆக்குவதற்கைம்பது வருஷம்வேண்டும்
அழிப்பதற்கறைநொடி போதும்”

என்ற பழமொழி யுண்மையாயிற்றே என்று பலவாறு சிந்தித்து ஏங்கியேங்கி அழுதகண்ணீரும் சிந்திய மூக்குமாயிருப்பவர் அநேகரை நாம் காணலாம். இதற்கொரு சிறு திருஷ்டாந்தங் காட்டுவாம்:—

ஒரு குழந்தையானது அடிக்கடி சிற்றுண்டி கொடுக்குமாறு அரற்றிக் கொண்டிருப்பதற்காகக் கோபங்கொண்ட தாயானவள் மிளகை உறைத்து அக்குழந்தையின் கண்ணிற் போட்டுப் பயமுறுத்தி வந்தாளாம். ஒருநாள் கோபத்தோடு மிளகுறைத்துப் போடுகையில் பொல்லாத வேளையாக அம்மிளகில் வேறேதேனும் கெட்டபொருள் சம்பந்தப்பட்டோ மற்றெக்காரணத்தாலோ குழந்தையின் கண்களிரண்டும் ஒளிமழுங்கிக்குருடாய் விட்டனவாம். பிறகு குழந்தையானது "அடி அம்மா! எனக்குப் பக்ஷணம் வேண்டாம் என் கண்ணைக் கொடடி" என்று புலம்பத்தலைப்பட்டதாம் அந்தோ! இதைக்கண்டோர் கேட்டோரது உள்ளமே "நெருப்பில் வீழ்ந்த புழுப்போல்" வருந்து மெனின், அத்தாயின் செய்தி அப்போது எவ்வாறிருக்கு மென்பதை இஷ்டர்களே உணர்ந்து கொள்வாராக.

பாழுங் கோபத்திற்கு இடங்கொடுத்ததினாலன்றோ இவ்விபரீதம் சேர்ந்தது. உலகத்திலே பற்பல கொலைகள் நடத்தற்குக் காரணம் கோபமேயாம். களவு நடத்தற்குக்காரணம் கோபமேயாம். அளவிறந்த பொருள்கள் சேதப்படுதற்குக்காரணம் கோபமேயாம். அரசாங்கத்தாருக்கு ஓயாதவேலையும், ஒழியாததொல்லையும் அதிகப்படக் காரணம் கோபமேயாம். சுருக்கச்சொல்லின் எல்லாக்கேடுகளுக்கும் மூலகாரணமாயிருப்பது கோபமேயாம். ஆதலினால் கோபத்தைச் செய்தற்குக்காரணம் ஒருவனிடத்துண்டாயினும் அதனைச் செய்யலாகாது, இதனை வள்ளுவர் தமது குறளில் வெகுளாமை என்னும் அதிகாரத்தில்,

> **இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்**
> **புணரின் வெகுளாமை நன்று.**

என்று கூறினர். கோபந்தோன்றுமாயின் மனக்கலக்கம் உண்டாகும், ஒருவனுக்கு அருளினால் உண்டாகும் முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் கொன்றுகொண்டெழுகின்ற கோபத்தின் மேற்பட்ட பகைவேறில்லை. இதனை,

> **நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்**
> **பகையு முளவோ பிற.**

ஆதலினாலே தன்னைத்தான் துன்பமடையாமற் காக்க நினைத்தானாயின் தன் மனத்திலே கோபம் வாராமல் காக்கக்கடவன். காவனாயின் அக்கோபம் அவனையே இருமையினும் கடுந்துன்பங்களையடைவிக்கும். வலியார் மேற் செய்யுங் கோபம் அவ்வலியாருக்குத் தீங்கு செய்யமாட்டாமையால் அதனைத்தடுத்தவிடத்தும் தருமமில்லை, மெலியார்மேற் செய்யுங்கோபம் அவருக்குத் தீங்கு செய்வதால் அதனைத் தடுப்பதே தருமம். வலியார்மேற் செய்தால் கோபம் இம்மையில் அவராலே துன்பமொன்றையே அடைவித்தலாலும், மெலியார்மேற்

செய்யுங் கோபம் இம்மையிலே பழியையும் மறுமையிலே பாவத்தையும் அடைவித்தலாலும் இதுவே மிகக்கொடியதாகும் இதனை,

செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீயபிற.

ஆகவே கோபம் ஓரிடத்துமாகாதென்பதே துணிபு.

ஒருவன் பாலமன்மதன்போல அழகுள்ளவனாயிருப்பினும். கோபம் மேலிட்டபோது அவன் முகத்தைப்பார்த்தால் மூதேவிக்கு மூத்தமகனாகத் தோன்றுவான். ஒருத்தி திருமகள்போல் சுந்தரமுள்ளவளாயினும் முனிவு தலைசந்தபோது அவள் வதனம் அத்திருமகளின் தமக்கைமுகம் போலவேயிருக்கும். இதற்குச்சான்றாக காலஞ்சென்ற ஸ்ரீமான் மர்யூரம், வேதநாயகமுதலியாரவர்கள் தமது நீதி நூலில்,

கோடவாண் முகஞ்சுழித்தித ழ்மடித்தெழில்தலையச்
சேடன்மீதியான் சினமுற்றபொழுதெத்தீகழ
மாடிநோக்கயானியான் கோல்மற்றோர்கோலென்றஞ்சித்துத்
தேடிநோக்கவோர்தருபமே கண்டுளந்திகைத்தேன்.

எனக்கூறியது பொருத்தமுற்றதே.

ஆகவே பழிபாவங்கட்குக் காரணமாகிய கோபத்தை யறவே நீக்கி நன்மை பயக்குஞ் சொற்களை ஆராய்ந்து இனிய சொற்களை யெவரிடத்துங்கூறிப்பாவந்தேயப் புண்ணியம் வளரப்பார்த்துநன்மை யடைய நமது நண்பர்கள் நாடுவார்களாக.

உள்ளியவெல்லா முடனெய்துமுள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

இங்ஙனம்
சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோவை.

---

## கம்பராமாயணச் செய்யுளாராய்ச்சி.

இன்னும் (முற்றொடர்ச்சி.)

ஆசலம்புரிஐயம்பொறிவாளியுங்
காசலம்புமுலையவர்கண்ணெனும்
பூசலம்பும்நெறியின் புறஞ்செலாக்
கோசலம்புனையாற்றணி கூறுவாம். என்றது

ஆற்றுப் படலத்தின் முதற்செய்யுள் இது குற்றத்தை மிகச் செய்கின்ற பஞ்சேந்திரியங்களாகிய அம்புகளும், இரத்தினபாணங்கள் புரளப்பெற்ற கொங்கைகளையுடைய மங்கையர் கண்களென்று சொல்லத்தக்க அமர்க்களத்தம்புகளும் தத்தம் நெறிதப்பிச்செல்லாத கோசலநாட்டை யலங்கரிக்கும் சரயுநதியின் அழகைச் சொல்லுவாம் என்று பொருள்படும். எனவே அந்நாட்டவர் தத்தம் மெய் வாய் கண் மூக்குச்செவி யென்கிற ஐம்பொறிகளால் தமக்குறியவல்லாதபொருள்

களை நுகராத அறவோர் என்பதும், அந்நாட்டைப் பரிபாலிக்குஞ் சூரிய குலத்தரசர்களும் படைவீரரும் "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும், பெண்டிரும்பிணியுடையீரும்பேணித், தென்புலவாழ்நர்க் கருங்கடனிறுக்கும், பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும், எம்மம்புக டிவிடுதும் நும்மரண் சேர்மின் என அறத்தாறு நுவலும் --எங்கோ" வென ஆன்றோர் கூறியவாறு (புறநானூறு) தருமயுத்தம் புரிவோர் என்பதும் பெறப்படும்: அரசனும் பிரஜைகளும் அறத்தினரில் வழி மாதம் மும்மாரிபெய்து நாடு செழிக்காதாதலின், நாட்டிற்கு இங்ங னம் விசேடணங் கூறப்பட்டது. இப்பொருளில் அம்புக்கு உபமே யமாகிய கண்களை உபமானமாக்கி எதிர் நிலையணி யமைத்திருத்தல் கருதத்தக்கது. இதனை விபரீத வுவமை யென்பர் தண்டியாசிரியர். இனி, இரண்டாவது அடிக்கு மங்கையர் கண்களாகிய மன்மதன் கலகத்தை விளைக்கும் அம்பு எனக்கொண்டு மங்கையர் கண்கள் நெறி தப்பிச்செல்லாத கோசலநாடெனக்கொள்வது மொன்று.

என்பது அந்நாட்டுமகளிரனைவரும் கற்புடை மகளிர் என்றபடி. இப்பொருள் ஐம்பொறிவாளியும், என்றதனாலேயே அமைந்து இட்க்க "கண்ணெனும் பூசலம்பும்" என்றது மிகையென்பார்க்கு முனிவர் வந்தார், அகத்தியனாரும் வந்தார். என்ற வழக்குப்போல மகளிர் கண்கள் நெறிதப்பிச்செல்லாத சிறப்புப்பற்றிக் கூறினாரெனக.

அன்றியும் ஐம்பொறிவாளியும் என்பதற்கு ஐந்து என்னுங் கணக்கையுடைய மன்மதனுடைய பஞ்சபாணங்களும் எனப்பின்னர் மகளிர்கண்கள் நெறிதப்பிச்செல்லாது என்றதற்கேற்பக் காரணமாக்கிக் கூறுவாருமுளர்.

நதியையுடைத்தாதல் நாட்டிற்கோர் அழகாதலின் கோசலத்தை யலங்கரிக்கும் என்றபொருள் படக் "கோசலம்புனையாறு" எனப்பட்டது. "ஆறில்லா வூருக்கழகுபாழ்" என்றது இங்குக்கருதத் தக்கது.

இவ்வண்ணமே இவ்விராமாயணச் செய்யுள்கள் எல்லாம் ஆராய்பவர்களுடைய ஆற்றலுக்கேற்பப் பலப்பொருள் படுமாறு அமைந்திருத்தலால் இவற்றைப் பணிவல்ல பொற்கொல்லனாற் பலவாறு இழுத்துப்பணி செய்யப்படும் தங்கக்கம்பிகளெனக் கூறலாம். அங்ஙனம் பலபொருள் படுதல் வந்துழி வந்துழிக்காட்டுதும் ஆங்காங்குணர்க. அல்லாமலும் "கம்பன் கருத்தைக் காணுவார் யார்" என்பதற்கேற்பச்சிற்சில செய்யுள்கள் கற்று வல்ல புலவர்களாலும் பொருள்காண்டற்கரியனவா யமைந்துள்ளன. அவ்வாறு அரிதிற்பொருள் காணத் தக்க செய்யுள்கள் எல்லாம் கம்பசூத்திரம் (கம்பசித்திரம்) எனப்படும்.

அவை "மேடமாமதிதிதி நவமிமீன்கழை
நீடுறுமாலை கற்கடகநீதிசேர்
ஓடைமாகளிறனு னுதயராசிகோள்
நாடினேகாதசர் நால்வருச்சரே."

"மன்மதக்களிறு மாதர் கொங்கையும் மாரனம்பும்
தென்வரைச்சாந்து நாறுஞ்சேனைவந் திறுத்ததன்றே"

என்றாற்போல்வன.

இவற்றுள் ஏகாதசர் நால்வருச்சமென்றது ஒருஜாதகனுக்குஏகாதச ஸ்தானத்துக்குரியர் ஒருவரன்றி நால்வராதல் இல்லையாதலானும், ராமஜாதகத்தில் ஐந்து கிரகங்கள் உச்சம் என்று வான்மீகி முதலிய பலர் கூறுங்கூற்றுக்கு முரணுதலானும் தெற்றெனப் பொருள் படாமல் மயக்குகின்றது; பின்னர் ஆராய்ந்துபார்க்க அதுவே லக்கினத்துக்குப் பதினோராமிடமும், பதினோராமிடத்துக்குப் பதினோராமிடமுமாக முறையே நான்கு பதினோராமிடத்துக் குரியவர் உச்சரெனவும் மேடமாமதியென்று மாதத்தைச் சொல்லிய முகத்தானே சூரியன் மேடராசியில் உச்சனெனவும் பொருள்பட்டு முன்னோர் கொள்கைக்கு முரணாமல் அரிதிற் பொருள்படுகின்றது.

இனி மன்மதக்களிறு என்றது இருளுக்காகிப் பின்னர் இருள் மகளிர் கூந்தலை யுணர்த்துகின்றது, எனவே கூந்தலினும் கொங்கைகளினும் முறையே மன்மதபாணமாகிய பூக்களும், பொதியமலைச் சந்தனமுங் கமழப்பெற்ற பெண் சேனை வந்து தங்கிற்று என்று பொருள் படும்.

"அன்றியும் முன்னோர்மொழி பொருளேயன்றி யவர் மொழியும் பொன்னேபோற் போற்றுதும்" என்றதற்கேற்ப, இதிற்பலசான்றோர்களுடைய அபிப்பிராயங்கள் அமைந்திருப்பதோடு அவர்களுடைய வாக்குக்களும் அமைந்துள்ளன. உதாரணமாக

"புள்ளிமால்வரை பொன்னெனநோக்கிவான்
வெள்ளிவீழிடை வீழ்த்தெனததாரைகள்
உள்ளியுள்ளவெலா முவந்தீயுமவ்
வள்ளியோரின் வழங்கினமேகமே."

என்ற செய்யுளில்.

"தேனிரைத்துயர் மொய்வரைச்சென்னியின்
மேனிரைத்து விசும்புறவெள்ளிவெண்
கோனிரைத்தனபோற் கொழுந்தாரைகள்
வானிரைத்துமணந்து சொரிந்தவே"

என்ற சிந்தாமணிக்கவியின் பொருளும் சொற்களும் அமைந்திருத்தல் காணத்தக்கது.

இங்கு மழைத்தாரைகளுக்கு வெள்ளிவிழுதுகளையும், வெள்ளிக் கோல்களையும் உவமித்திருத்தல் பொருளொற்றுமை; வரை, வான், தாரைகள், என்பன சொல்லொற்றுமை. (இன்னும் வரும்)

தி. சுப்பிரமணிய ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், ஹைஸ்கூல், ஸ்ரீரங்கம்.

## ஐய விரு.

"செந்தமிழ்ச்செல்வம்" பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐய!

செந்தமிழ்ச்செல்வம், ஆவணிமாதச் சஞ்சிகையில் 106ம் பக்கத்தில் "நமது நாடு முன்னுக்குவராத தடையாக இருப்பவைகள்" என்னும் விஷயத்தில் "நெல்லைமித்திரன்" என்பவர் ஆலயங்கட்டுதலும், திருவிழாநடத்துதலுங்கூட முன்னுக்கு வருதற்குத் தடையான தென்றெழுதியிருக்கிறார். இது "ஆலயந்தொழுவது சாலவு நன்று" என்னும் தெய்வப்புலமை ஔவைவாக்குக்கு, புராணாக இருப்பதோடு வேத ஆகமங்களுக்கு விருத்தமாக இருக்கின்றதே? ஐரோப்பியர்கள் எத்தனையோ லட்சம் செலவுசெய்து ஆலயம் (Church) கட்டுகிறார்கள். அவர்கள் தேசம் முன்னுக்கு வராதுபோயிற்று?

நமது நாட்டுக்கு நன்மை செய்ய நினைத்துத் தீமைசெய்யும் இவ் விஷயம் தீட்டப்பெற்றிருக்கிறதே. இதனால் நம்மவர்க்கு உள்ள தெய்வபக்தியும் குறைவதற்குக் காரணமாகிவிட்டதே. இப்படியுஞ் செய்யலாமா? இதற்கு "நெல்லைமித்திரனுகிலும்" தாங்களாகிலும் காரணங்காட்டி விளக்கமாக எழுதுவதோடு, நமது நாட்டில் இப்பொழுது குறைந்துகொண்டுவருகிற தெய்வபக்தி, பலகேடடைவிளைத்துக் கொண்டிருக்கிறது, ஆகையினால் நமதுநாட்டில் தெய்வபக்தி மிகும்படியான வியாசங்களை எழுதிபயன்செய்ய வேண்டுகின்றேன்.

தெய்வபக்தி யில்லாதவன் பழி பாவங்களைச் செய்ய அஞ்சான் ஆகையால் தெய்வபக்தியிற் சிறந்ததும், ஞானபூமி என்னும் சிறப்புப்பெயர் பூண்டதுமான நமது தேயத்தில் தெய்வபக்தி ஓங்குக! அறம் தழைக்க!! இன்பம்பெருகுக!!! "செந்தமிழ்ச்செல்வம்" நீடூழி தழைத்து ஓங்குக!!!!

**கடவுட்பிரியன்.**

---

## * 'தமிழ்மறை'யனுதித்துவம் (தொடர்ச்சி)

107-ம் பக்கத்தொடர்ச்சி.

வேதம் என்னும் பதத்திற்கு முதனூல் என்று பொருள் பின்னும் "என்னை நன்றாக விறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத்தமிழ்செய்யுமாறே" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

3. நந்தமிழாகமநூல் வெளிப்பட்ட திவ்விய க்ஷேத்திரமோ திருவாவடுதுண்டுறை யென்னுந் திவ்விய சிவக்ஷேத்திரமாம். அவ்வாலயத்தில் சிவமங்கை தன்பங்கனைப் பணிந்திருந்ததாக:—

---

* பிழை திருத்தம். 107-ம்பக்கத்தில் முன் வியாசத்தில் 'சிமிட்டகலைப் பட்டுயிர் எகின்ற வாறுந்' என்பதை, 'சிமிட்டலைப் பட்டுயிர் போகின்றவாறுந்' என்று திருத்திக்கொள்ளவும்.

" சேர்ந்திருந்தேன் சிவமங்கை தன்பங்கனைச் சேர்ந்திருந்தேன் சிவனுவடுதண்டுறை" என்று நந்திருமூலதேவர் வெளியிட்டருளினூர்.

4. இத்திவ்விய திருமந்திரமாகிய தமிழ்வேதாகமத்தைத 'மறைப் பொருள் சொல்குவன்' என்று பின்வருமாறு கூறுகின்றார்.

" நான்பெற்ற வின்பம் பெறுக விவ்வையகம்
வான்பற்றி நின்ற **மறைப்பொருள் சொல்குவன்**
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு **மந்திரந்**
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே."

5. இத்திருமந்திரத்தைத் 'தமிழ்ச்சாத்திரம் என்றும் பின்வருமாறு வெளியிடுகின்றார்.

'அங்கிமிகாமை வைத்தானுடல் வைத்தான்
எங்குமிகாமை வைத்தானுல கேழையுந்
தங்கிமிகாமை வைத்தான்றமிழ்ச்சாத்திரம்
பொங்கிமிகாமை வைத்தான் பொருட்டாலுகுடி"

6 ஆகவே அறுதிதமிழ் மறையாகிய திருமந்திரத்துக்கு ஸ்ரீ திருமூலதேவர் சூட்டுந்திருநாமங்களாவன:—

(1) 'தமிழ்ச்சொல்' (2) 'திருக்கூத்தின் சிலாங்கவேதம்' (3) 'தமிழ்' (4) 'மறைப்பொருள்' (5) 'தமிழ்ச்சாத்திரம்' (6) "அறுதி கலையாகமவேதம்" ('ஆகுமறுதிகலை யாகமவேதம்')

7. பின்வந்த மஹான்களும் இத்தமிழ் மறையை "தமிழ்மூவாயிரம்" "சிவயோகமிகுமந்திரம்" என்று கூறுவார்கள். நமது மாபினரும் அருண்மொழித்தேவருமாகிய ஸ்ரீ சேக்கிழார்நாயனார் பின்வருமாறு நந்திருத்தொண்டர் புராணத்திற் கூறுகின்றார்,

(1) " தண்ணிலவார் சடையார்தாந்தந்த **வாகமப்பொருளை**
மண்ணின் மிசைத்திருமூலர்வாக்கினாற் றமிழ் வகுப்பக்
கண்ணியவத் திருவருளா லவ்வுடலைக் காப்பிக்க
எண்ணிறைந்த வுணர்வுடையா ரீசரரு ளெனவுணர்ந்தார்"

(2) " ஊனுடம்பிற் பிறவிவிடந்தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதலான்குமலர் **நற்றிருமந்திரமாலை**
பானமைமுறை யோராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்
ஏனெயிறணிந்தாரை 'யொன்றவன்றா' னெனவெடுத்து"

(3) " முன்னியவப்பொருண்மாலைத் **தமிழ்மூவாயிரஞ்சாத்தி**
மன்னிய மூவாயிரத்தாண் டிப்புவிமேன் மகிழ்ந்திருந்து
சென்னிமதியணிந்தார் தந் திருவருளாற் றிருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்."

**ஹா. ஷண்முகமுதலியார்**

சைவசித்தாந்தி, சேலம்.

# மனோகரன்.

கடல்புடைசூழ்ந்த இப்பூவுலகின்கண், புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தின் தெட்சிணபாகத்தில் செந்தமிழ் வழங்கும் சோழவள நாட்டில், ஜீவநதியென்றும் புண்ணியநதியென்றும் போற்றப்படுகிற காவேரிநதிதீரத்தின் தென்பாரிசத்தில் திருவொற்றியூர் என்றொரு சிறு கிராமம் அநேகஆண்டுகளுக்கு முன்னிருந்தது. அதற்குத்தற்காலம் திருவையாறெனப் பெயர் வழங்கி வருகிறது. அக்கிராமம் நன்றாத நீர்வளமலிந்து நிலவளம் பொலிந்து செங்கமலச் செல்வியின் திருவருளோக்கம் பரிபூரணமாயமைந்து ஜனங்கள் விரும்பி வசிப்பதற்குரிய எல்லாச்சௌகரியங்களும் அமையப் பெற்றுள்ளது.

அவ்வூரை நாற்புறமும் மதில் சூழ்ந்ததுபோல் தென்னை, பலா, மா, கமுகு, வாழை முதலிய பலவகை விருக்ஷங்களடர்ந்த சோலைகள் சூழ்ந்து, பார்ப்பவர் கண்ணுக்கும் மனதுக்கும் குளிர்ச்சி தரத்தக்க பசுமை நிறம் பொருந்தி விளங்கும். அச்சோலையின்கண் சூரிய உஷ்ணம் காண்பதரிது. மந்தமாருதம் வந்துலாவிய வண்ணமாகவேயிருந்தது. பல விதமான பட்சிஜாதிகள் சதா கலகலவென்ற சப்தத்துடன் காதுக்கினிமையாகப்பாடி விளையாடிக்கொண்டிருக்கும். சோலைகளைச்சுற்றி வடபாகத்தில் காவேரிநதியும் மற்றையமூன்று பக்கங்களிலும் வாழைத்தோட்டங்களும், அதைச்சுற்றிக்கரும்புக் கொல்லைகளும், அதைச்சுற்றி நெல்விளையும் நஞ்செய் நிலங்களும் மிகுந்து செழித்துவிளங்கும். பயிரிடும் நிலங்களைத்தவிர்ந்து கரம்பை நிலமென்பது காண்பதரிது. பொன் விதைப்பினும் விளையக்கூடிய அந்நிலங்கள் ஒரு ஏக்கர் குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் பொறும். அவ்வூரில் பெரும்பான்மை அந்தணர்களும், சில வேளாள குலத்தவர்களும் குடியிருந்தார்கள்.

அப்பிராமணர்களுள் வேதாந்தத்தில் மிக்க வல்லவரான ஒருவர் இருந்தார். அவரது நாமதேயம் வேதாந்த சுப்பிரமணியஐயர். அவருக்கு வாழ்க்கைத்துணையாக வாய்ந்தவள் பதியின் மனமொத்து நடப்பவள். இருவருக்கும் பிதுரார்ஜிதம் சுவல்பம் உண்டு. அதை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் பண்ணிவந்தார்கள். சிறிது காலத்திற்கெல்லாம் அந்த மாதுசிரோன்மணியும் ஒரு பாலனை ஈன்றெடுத்தாள். அவன் முகம் இளஞ்சூரியனைப்போல் விளங்கிற்று. பாலகனும் தாய் தந்தையர்களைப் புன்சிரிப்பினாலும், மழலைச் சொற்களினாலும் சந்தோஷப்படுத்தினான். அவனது லக்ஷணம் யாவர் மனதையும் கவரக்கூடியதாயிருந்ததினால் 'மனோகரன்' என நாமகரணம் செய்வித்தார்கள். ஆனால் அவன் பிறந்ததிலிருந்து அவன் தாயார் ஒருவியாதியால் அவஸ்தைப்படநேர்ந்தது. அவ்வியாதியானது ஒருவராலும்

தீர்க்கப்படவில்லை, அது அவளது முடிவுக்குக்காரணமாயிருந்தது. ஒருநாள் காலை பத்து நாழிகைக்குப் பால் மறவாத தன் பாலன் மேல் கை வைத்தபடியே இப்பூலோகத்தை விட்டகன்றாள்.

(இன்னும் வரும்) வை. நாகநாதன்.

மாணவன், ஆறுவது பாரம், எஸ். பி. ஜி. கழகம்

# *மாணிக்கஜோதி

அல்லது

# மாண்புடை மனைவி.

## முதல் அத்தியாயம்,

(92-ம் பக்கத் தொடர்ச்சி.)

* "மங்கைக்காசி" என்று முன்னமே ஒரு நாவல் இருப்பதால் மங்கைக்காசி, என்றதை "மாணிக்கஜோதி" என்றுபெயரை மாற்றிக்கொண்டோம்.

இவ்வண்ணம் எனது உள்ளத்தில் உதித்த எண்ணங்களை எனது நேயர்களுக்குப் புலப்படுத்தாமல் அவர்களினின்றும் பிரிந்து எனது கண்களையும் கருத்தையும் கவர்ந்த அந்த இரட்டைமாட்டு வண்டியையும் அதிலுள்ள மனிதரையுந்தொடர நினைத்தேன். அவ்விதம் நினைத்தாலும் அந்த இடத்திலேயே என்னோடுகூட இருந்த நேயர்களைவிட்டுப்பிரிந்து அவ்வண்டியைத் தொடர்ந்து செல்வது அவ்வளவு நாகரீகமானதல்லவென்று என் மனதில் தோன்றினபடியால் சிறிது எனக்குச் சிந்தனையும் கவலையும் தோன்றிற்று. "அகத்தினழகு முகத்திற்றெரியும்" என்ற முதுமொழிப்படி எனது மனத்தின்கண்ணுண்டான சிந்தனையாலும் இவர்களை என்ன காரணஞ் சொல்லிவிட்டுப் பிரிவது, தக்க காரணங்கள் தோன்றவில்லையே, இந்த முக்கியமான விஷயம் கவனிக்கப்படாமல் போகின்றதே என்னும் கவலையாலும் முகத்தில் ஒரு சிறிது மாறுபாடு உண்டாயிற்று. இதனை, என்னோடு அங்கு இருந்த நண்பர்களில் ஒருவரும் அதிபுத்திசாலியுமான சிங்காரவேலு முதலியாரென்பவர் என்னை நோக்கி "என்ன சிந்தனை? ஆழமாயிருக்கிறதே" என்றார். அவர் அதி புத்திசாலி என்றறிவேனானதால் அவர் கேட்டவுடனே எனக்குச் சிறிது வெட்கமும், எல்லாருக்குந்தெரிந்து போய்விடும்போலிருக்கிறதே என்ற எண்ணமும் எனக்குக் குறுக்கிட்டது. ஆனாலும் சமாளித்துக்கொண்டு "ஆமாம்! மிக முக்கியமான விஷயம் எனது தந்தையார் சொல்லிய சங்கதி ஒன்று செய்யத் தவறினேன். அவர்கள் கோபித்துக்கொள்வார்களே இனியேனும் விரைந்துபோய்ச்செய்து முடிக்கலாமாவென்று நினைக்கின்றேன்" என்றேன்.

உடனே நல்ல வேளையாய் எல்லோரும் தங்கள் தங்கள் முக்கிய மான வேலைகளை எடுத்துச்சொல்லி அவர்களும் சீக்கிரம் போகவேண்டும் என்றார்கள். சிங்காரவேல் முதலியார் மட்டும் தனக்கு முக்கிய மான வேலை ஒன்றிருக்கிறதாகச் சொல்லாவிட்டாலும் தனக்கும் முக்கியமான வேலை பல இருப்பதுபோலக் குறிப்பாற் காட்டி எங்கள் எல்லோரையும் திரும்பும்படித் துரிதப்படுத்தினார்.

எனக்கோ உள்ளடங்காச் சந்தோஷம் உண்டாகி விட்டது. ஏனென்றால் நம்மை மேலும் மேலும் கேள்விகள் கேட்காமலும், தகப்பனார் சொல்லிய முக்கிய விஷயம் என்னவென்று அறிய விரும்பாமலும் விட்டது பற்றியும் ஒவ்வொருவருக்கும் முக்கியமான வேலைகள் இருப்பது பற்றியும் சிங்காரவேல் முதலியாரே துரிதப்படுத்தித் திருப்புவதையும் நினைக்க நினைக்க அடங்காமகிழ்ச்சி யுண்டாயிற்று. என்னைப் பல கேள்விகள் கேட்க எனது சிநேகிதர்களுக்கு நேரமில்லாதுபோனதே எனது அதிர்ஷ்டம் என்று நினைத்துக்கொண்டேன். அவர்கள் கேள்விகள் கேட்டிருந்தாலோ "ஒரு பொய்யை நிலை நிறுத்த ஆயிரம் பொய் சொல்லவேண்டும்" என்றபடி எத்தனை பொய்கள் ஒன்றன்மேலொன்றாகச் சொல்லி ஒவ்வொன்றையும் சாதித்துக்கொண்டு வருவேன். இந்தத்தொல்லை நமக்கில்லாது போயிற்றே இது நமது யோகம் என்று நினைத்துக்கொண்டேன். என்றாலும் சிங்காரவேல் முதலியாரைப்பற்றி மட்டும் கொஞ்சம் பயம். ஏனென்றால் கேலியாக அல்லது விளையாட்டாக எங்கே எதையாகிலுங் கேட்டுவிடுகிறாரோ வென்று நினைப்பு உண்டாகும், அப்பொழுது திரும்பித்திரும்பி அவர் முகத்தைப் பார்ப்பேன். அவர் என்னைக் கவனியாது விரைவாக நடந்துகொண்டிருந்தார். தெப்பக்குளம் வருவதற்குள் ஒவ்வொரு சிநேகிதரும் தம் தம் வீட்டுக்குப் போகும்வழி வரவும் உத்தரவுபெற்றுக் கொண்டு திரும்பி விட்டார்கள். சிங்காரவேல் முதலியார் தெப்பக் குளத்தைத் தாண்டிச்செல்லவேண்டியவராயிருந்தும் ஏதோ சாக்குச் சொல்லி ஆண்டார்த்தெருவழியே ஒரு சிநேகிதரோடு விடைபெற்றுச் சென்றுவிட்டார். இப்பொழுது எனக்குச்சிறிதும் கவலையில்லை என்று நினைத்துத் தெப்பக்குளத்து மூலையில் வந்து சீரங்கத்துக்குப்போகும் ஜட்காவண்டிகளில் திடமானதும் அதிவிரைவிற்செல்லக்கூடியதுமான குதிரை பூட்டிய வண்டி ஒன்றைக் கண்டு அதை நாடிச் சென்றேன். அன்று விசேஷ தினமாதலினால் அவ் வண்டிக்காரன் ஒரு ஆளுக்கு இரண்டு அணா கேட்டான். நான் ஒரு அணாவிலிருந்து ஒன்றரை முக்காலணா வரை கேட்டுப்பார்த்தேன். அவன் இரண்டு அணாவில்ஒரு பைசா குறைத்தாலும் முடியாதென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். பிறகு வேறு வண்டி ஏதேனும் கேட்கலாமென்றால் ஒவ்வொரு குதிரைவண்டிக்காரனும் அந்த இரண்டணாவே கேட்டான் ஒவ்வொரு வண்டிக்காரன் குதிரையும்,

" முந்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்க
பிந்னே யிருந்திரண்டு பேர் தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி "

என்ற காளமேகப்புலவர் பாட்டை மெய்ப்பிக்குந் தன்மையுடையதாகவேயிருந்தது,

ஆகையால் நான் முதலிற் கேட்ட பருத்த குதிரை கட்டிய வண்டியிலேயே ஏறுவது நலம் என்று தீர்மானித்துக்கொண்டு, வண்டிக்காரனிடத்தில் சீக்கிரம் விடவேண்டுமென்று பேசிக்கொண்டு ஏறிக்கொண்டேன். அந்தவண்டியில் ஆள்கள் சேர்ந்த பின்னலன்றோ விடுவான்; எனக்காக விட்டுவிடுவானா? வண்டிக்குள் நாலுபேரும் பெட்டிமேல் ஒருவனும் ஆக ஐந்துபேர் சேரவேண்டுமே நான் ஒருவன்தானே யிருக்கிறேன், இன்னும் நாலுபேருக்காக நாற்பதுமுறை அங்கும் இங்கும் அலேந்தான். நாலாயிரந்தரம் சீரங்கம் திருவானைக்காவலுக்கு ஒரு ஆள்! ஒரு ஆள்! என்று கத்திக்கொண்டே திரிந்தான். நாம் அவசரப்பட்டு ஒரு காரியம் செய்யப்போகிற பொழுதுதான் தடை பல குறுக்கிடுவது வழக்கம். திருவிழாக்காலமாக இருந்தும் ஆள் சேரவில்லே. அந்நேரம் எல்லாரும் நடந்து சென்றனர்: என் மனம் அவாசப்படுவதுபோல் வண்டி போதற்கில்லாமல் போயிற்று தெப்பக்குளத்துமூலேயைக்கடந்து அவன் ஓட்டவுமில்லே. இதற்கு மத்தியில் குறுக்கு மறுக்காக வண்டியை ஓட்டுதற்காக போலீஸ்காரன் ஒருவன் வந்து வண்டிக்காரனே அதட்டினன். அவனுக்கு ஏதோ துட்டை எடுத்துக்கொடுத்துவிட்டு, திரும்பித் திரும்பி விரட்டிக்கொண்டேயிருந்தான். (இன்னும் வரும்)

கதாப்பிரியன்.

---

## சுகாதாரம்.

### முதற்பாகம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

(ஔவை.)

சர்வ வல்லமையுள்ள கடவுள் சிருஷ்டித்த கண்டங்களிலெல்லாவற்றிலும் இப்பரதகண்டமே மிக மேன்மை பொருந்தியது. மானிடப்பிறப்பை எடுத்த ஒவ்வொருவரும் அடைய வேண்டியவை புருடார்த்தங்கள். அவை தர்மார்த்த காம மோக்ஷம் என்னும் அறம், பொருள், இன்பம், வீடு, என்பவை. இவைகளேயெல்லாம் தம் மக்கட்கே யன்றி உலகமெங்கும் பரந்து வியாபித்திருக்கும்படி செய்த நாடு யாது? நம் இந்தியாவேயன்றி வேறல்ல! நம் நாட்டின் ஞானப்பெருமை யென்ன, கைத்தொழில்களின் சிறப்புகளென்ன, அநேகமாயி

நம் உயிர்கட்குண வளிக்கும் பல உலோக சுரங்கங்களென்ன, கல்வி நூற்களின் அரும் பெருமைகளென்ன, தமிழ், சமஸ்கிருதம், இவைகளின் மேன்மைகளென்ன, தெய்வபக்தி யென்ன, இதன் பெருமைகள், எண்ணித்தொலையா, ஏட்டிலடங்கா.

இவ்வளவு ஞானம் பொருந்தியுள்ள நமது முன்னோர்களின் ஆசாரங்களைச் சிறிது ஆராய்வோம். அதன் அருமை பெருமை, கெடுதலென்றும் உபயோகமற்றதென்றும் தள்ளப்படும், இக்காலத்திலன்றோ புலப்படுகின்றது. இவ்வாசாரங்கள், கணக்கிலடங்காதிருப்பினும், மிக சாதாரணமான தொன்றாகிய நம் வீடுகள் தோறும் காலையிலும்மாலையிலும் தெருவில் நீர் தெளித்துத்துலக்கப்படுவதை இங்கு ஆராய்வோம்.

இவ்வழக்கம் மிக சாதாரணமாயிருப்பினும் இதன் பிரயோஜனங்கள் பலவுள. அவற்றுள், வீதி சுத்தமும் அலங்காரமும் பெறுவதன்றி, மிக முக்கியமானதாகிய, தூசியை 'அடக்கும் தன்மையும் பொருந்தியிருக்கின்றது. இத்தூசிகள் மிகச் சாமானிய மானதென்று பலர் எண்ணக்கூடும். ஆனால், இதனால், அநேகர் வியாதியையடைந்தும் பலர் மரணமடைவதையும் கேட்க அவர்கட்கு ஆச்சரியமாயிருக்கலாம்.

வெகு சமீபத்தில், பூதக்கண்ணாடியில் தேர்ச்சிபெற்ற 'டான்சர்' என்னும் சாஸ்திரியார் பட்டணங்களின் தூசிகளைப் பரிட்சை செய்ததில் அவைகள் நம் கண்ணுக்குப் புலப்படாத மிகச்சிறிய பல வியாதிகளைத்தரும் பூச்சிகள் நிறைந்துள்ளன வென்றும் அவைகள் வெகு வாய்ப்பறக்கும் உயரம் மனிதரின் வாய்க்குச்சரியான 5 அடி என்றும் கூறுகின்றார்.

இதனால் நாம் அறியவேண்டியது யாதெனில், இக்கொடிய பூச்சிகளும், பலவிதமான அசுத்தங்களின் தூசிகளும் நம் வாயின் வழியாய் உட்சென்று பல வியாதிகளை உண்டுபண்ணுகின்றதென்பதே.

இவைகளைச்சற்று கவனிக்குமிடத்து நம் முன்னோர்களின் சிறப்பு நன்கு விளங்குகின்றதன்றோ. தற்காலம் சிறிது சிறிதாய்க் கண்டுபிடிக்கும் நூதனங்களை அவர்கள் அறியாமலிருந்தார்களென்று யார் சொல்லக்கூடும்? இதேமாதிரியாகவே ஒவ்வொரு ஆசாரங்களையும் சற்று ஆராய்வோமாகில், யாதோ, சில முக்கிய விஷயத்தைக்கு அவைகள் அநுபோகமாய் வருகின்றதென்பதை யாவரும் அறிவர்.

நிற்க, பல கொடிய நோய்களும், இத்தூசிகளின் மூலமாகவே எங்கும் பரவி, பலர்களின் உட்சென்று காலனுக்கு இரையாக்குகின்றன. அந்தோ! பலர் அறியாமையை என்னென்பது? நோயாளிகளின் அறையினின்றுவரும் எல்லா அசுத்தங்களையும் பூமிக்குள் போ

ட்டு புதைக்கவேண்டுமென்றும் வைத்தியர்கள் சொல்வதைக் கேட்காமல், அவர்களிஷ்டம்போல் நடப்பதின் பயன் எவ்வளவு கொடியதென்பதை நோக்குவோம்.

முதலாவது, விஷபேதியைக்கவனிக்குமிடத்து, அதன் பரவுதல் ஒரே விஷயத்தைப் பொறுத்ததென்றும், அந்நோயாளியின் முழுசுவாசத்தைச் சுவாசித்தாலும் யாதொரு கெடுதி உண்டாகாதென்றும், ஆனால், அவ்வியாதிப்பூச்சியின் ஓர் அணு தேகத்திற்குள் செல்லுமாயின் உடனே அந்நோய் உண்டாய்விடுமென்றும், வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். அந்நோயாளியின் அறையினின்று வரும் அசுத்தங்கள் சரியாய் எடுக்கப்படாமல், காய்ந்து, தூசியாய் பறக்கும்போது, எல்லோருடைய வாயின் வழியாய் வயிற்றுட்சென்று யாவரையும் அந்நோய்க்கு ஆளாக்கி விடுகின்றது.

இவைகளினால் நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டியது யாதெனில் எல்லா அசுத்தங்களையும் வெளியே எறிந்து விடாமல், பூமியில் புதைத்தாவது, எரித்தாவது தீரவேண்டும். இவைகளை கவனிப்பவர், அவர்மட்டுமல்ல, பிறர் நன்மையையும், தம் நாட்டினர் சுக நன்மையும் கருதினவர்களாவார்களென்பதற்கு ஐயமில்லை.

கடைசியாக, கூறவதொன்றுளது. நம் பட்டணங்களின் ரஸ்தாக்களில் தண்ணீர் தெளிக்கும் வழக்கம் இல்லாதது மிகவும் கவனிக்கத்தக்கது. தண்ணீர் தெளிப்பதினாலுண்டாகும் நன்மைகளில், தூசியை அடக்கி, நோயை மட்டுப்படுத்துதல் மிகமுக்கியமானது. இதனால் நோய் பரவாது, சுகமாகிய ஐஸ்வரியம் பெருகிப்பரவி நாடு இனிது விளங்கும்.

இதனை, நம் ஊர்க்காப்பாளர் கவனிப்பார்களென்று நம்புகின்றோம்.

J. M. சோமசுந்தரம்.

## கல்வியறிவில்லாப் பெண்டீர்களின் குடும்ப வாழ்க்கை.

நமது தேசத்தில் பெரும்பாலும் குடும்பங்களில் பெண்கள் புருஷர்கள் மனம்போல் நடவாமல் சிறிய விஷயம் முதல் பெரிய விஷயம் வரையில் ஒவ்வொரு காரியத்திலும் அவர்களது அபிப்பிராயம் பேதப்பட்டு தாறுமாறாக நடந்து குடும்பத்திற்குச் சீர் கேடும், கௌரவக் குறைவும் உண்டுபண்ணிப் புருஷர்களைச் சஞ்சல புத்திகளாக்கி விடுகின்றார்கள். ஒரு மனிதனுக்கு எவ்வளவு செல்வமிருந்தாலும், செல்

வாக்கிருந்தாலும், கௌரவமிருந்தாலும், பிரகஸ்பதிபோன்ற புத்தியிருந்தாலும் அம்மனிதனுக்கு மனைவி சரியாக நடந்து கொள்ளாவிட்டால் அவன் ஒருநாளும் சந்தோஷமாயிருக்க முடியாது. மேற் சொல்லிய நன்மைகளில் ஒன்றுமில்லாமல் வறுமையே குடிகொண்ட வாழ்வுடையோனாயினும் அவனுக்குப் பொறுமையுள்ள மனைவிமட்டில் வாய்த்தால் அவ்வறுமைகள் யாவும் தோற்றாமல் சுகமாக ஜீவிக்க ஏதுவாகிறது. கூலிவேலை செய்து பிழைக்கிறவனானாலும் அவனுக்குக் கிடைக்கிற கூலியின் அளவுக்குத்தக்கபடி செலவு செய்து வீணாக ஆடையாபரணங்களுக்கு ஆசைவைக்காமல், அயலாரைப்பார்த்து க்ஷாத்திரமும் ஆத்திரமும் கொள்ளாமல், புருஷனைக்கண்டு புலிபோற் சீறாமல், நாம் செய்த புண்ணியம் இவ்வளவுதானென்று தேறுதலடைந்து தானும் தன்னாலியன்ற வேலைகளைத்திருப்தியுடன் செய்து புருஷனுக்கு வேளாவேளைகளில் உணவிட்டு, மற்றும் அவனுக்கு வேண்டிய உதவிகளைச்செய்து ஒவ்வோர் சமயம்கூலி யகப்படாவிடில், அதற்காக புருஷனை ஹிம்சிக்காமல் அன்றைக்கு அரைவயிறோ, அல்லது உபவாசமாகவோ இருந்து புருஷனோடு சுக துக்கங்களைத் தானும் சலிப்பில்லாமல் அனுபவித்துச் சாந்தமாகவும், பொறுமையாகவும் பேசி இல்லற தர்மத்தை நடத்துகிற ஓர் உத்தமியான மனைவி வாய்த்தால் அவன் கூலிக்காரனானாலும் அவனது வாழ்நாளுக்கு நிகராக எதைத்தான் சொல்லமுடியும்? அவனுக்குத் துன்பமேது? கூலி யகப்படவில்லையேயென்றால் அதற்கென்ன நாளைபார்த்துக்கொள்வோம், இன்று இருப்பதைப் புசிப்போம். கவலைப்படாதீர்களென்று சமாதானஞ் சொல்லுகிற மனைவியைப்பார்க்கிலும், இவ்வுலகில் மனிதனடையவேண்டிய பாக்கியம் வேறுண்டோ? (இன்னும் வரும்.)

S. துரைசாமி ஐயர்,
ஸ்கூல்மாஸ்டர் மணத்தட்டை.

## எஸ். பி. ஜீ. ஐஸ்கூல் மாணவர்

### தமிழ்ச் சங்கம்.

இப்பெயர்பூண்ட தமிச்சங்கம் பாடசாலை திறந்ததிலிருந்து ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மாலைதோறும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது. இப்பொழுது இச்சங்கத்திற்கு மூன்று வயதாகிறது. இம்மூன்று வருஷங்களாக இச்சங்கம் சிறப்பாக யாதொரு குறையுமின்றி நடைபெற்றுவர அருள் செய்யும் கடவுளை மனதார வாழ்த்துவோமாக. மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் வெகு ஊக்கத்துடன் இதில் வேலைசெய்து வருகிறார்கள். கழகத்து ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் முறையே ஒவ்வொரு வாரத்திற்கு அக்ராசனம் வகித்து நடத்திவருகின்றனர். இதில் மாணாக்கர்களும் ஆசிரியர்களும் மிகக்களிப்புடன் வேலை செய்து வருகின்றனர். மென்மேலும் சிறப்பாகவே

நடந்துவருகின்றது. இன்னும் குறையின்றி வளரக்கடவுள் அருள் செய்வாராக. இதற்குத்தலைவராகிய கழகத்து தலைமை ஆசிரியர் கனம் பொருந்திய S. K. தேவசிகாமணி அவர்களின் முயற்சி நம்ம வர்க்கும் நமது நாட்டிற்கும் இன்றியமையாததும் பயன் செய்வதுமாம். இவர் இனிது சுகதேகத்தோடு நீடூழி வாழக் கடவுள் அருள் புரிவாராக.

பாஷாபிமானி.

## "உருது அஞ்சுமன்" (உருது சங்கம்.)

இப்பெயர்பூண்ட சங்கம் ஒன்று எஸ். பி. ஜி. ஐஸ்கூலில் கூட்டப் பெற்றிருக்கிறது. இதில் மகமதியமாணவர்கள் உருது பாஷை விருத்தியாதற் பொருட்டு ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதனை கலாசாலை பிரின்சிபால் துரையாகிய கனம் ஆலன் கார்டினர் அவர்களே துணை நின்றுஉற்சாகப்படுத்துகிறார்கள். இதற்கு எட்மாஸ்ட்டர்மகா-ள-ள-ஸ்ரீ S. K. தேய்வசிகாமணி அவர்கள் தலைவர். உருடு பண்டிதர் உதவித் தலைவர் இவர்கள் முயற்சி கொண்டாடத்தக்கதே. ஐஸ்கூல் முகமதிய மாணவர்கள் அனைவரும்கூடி இதனை ஏற்படுத்தினர். ஒழுங்காக நடத்துகின்றனர். இது வன்றோ ஒவ்வொரு பாஷாபிமானிகளும் செய்யவேண்டியது.

## சமாசாரக் குறிப்பு.

**சேற்றுமழை:**—சமீபத்தில் வங்காள நாட்டைச்சேர்ந்த பாட்வானில் மண்மாரிபெய்ததாம். அங்குள்ள தாமோதர ஆற்றங்கரையில் பெரிய ஓர் நீர்க்குமிழி யுண்டாயிற்றாம். அக்குமிழியால் உயர்த்தப் பட்ட அந்த ஆற்றின் கலங்கல் மண்மாரி ரூபமாக தரை வந்து சேர்ந்த தென்று சொல்லுகின்றார்கள், மரங்களின் இலைகளினும் நன்றாய் மண் ஒட்டியிருந்ததாம்.

பாதரக்ஷை லண்டன் பட்டணத்தில் ஒரு கடையில் பக்ஷிகளின் இறகுகளால் வெகுநேர்த்தியான பாதரக்ஷை செய்கிறார்களாம். அவைகளில் ஒரு ஜதை 500 பவுனும்.

**படிப்பு:**—ஜப்பானில் ஒரு குடித்தனத்தில் படிக்கத்தெரியாமல் ஒருவன்கூட இருக்கக்கூடாதாம். ஒரு ஊரில் படிக்கத் தெரியாத குடும்பம் ஒன்றுகூட இருக்கக்கூடாதாம். இதுபோல் நமது இந்தியாவில் எப்பொழுது ஆகுமோ?

**பருத்த மாம்பழம்:**—சிலோனில் கொழும்புத் துறைமுகத்தில் "கல்கத்தாவிலிருந்து கொண்டுவந்து வைத்த மாமரமொன்று 5 ராத்தல் நிறைகொண்ட கனி யொன்று தந்ததாம்.

*VERY EXCELLANT !* *VERY EXCELLANT !!*

## Up to date Treatment Ayurvedic Combinations.

## ஆயுள்வேத முறையும் ஐரோப்பிய முறையும் கலந்து செய்த பக்குவங்கள்.

Spermatorrhoea specific:— இது ஓர் நூதன மருந்து சொர்ப்பனஸ்கலிதம், தாது கட்டுமான மில்லாதிருத்தல் இவைகளுக்கு கைகண்டது 24 வேளைமருந்தில் குணப்பட்டுவிடும் பத்தியமில்லை ராஜாக்கள் மருந்து. படிக்கும் மாணுக்கர் இதைக் கவனிக்கவும். ரூ. 2–0–0.

**குழந்தைகளுக்கு**

Health pills:— (குழந்தைகளுக்கு சுகமாத்திரை) புட்டி அணு 4 மாத்திரம். ஜுரம், ஜன்னி, வலிப்பு, மந்தம், வயற்றுப்பொருமல், சகலத்திற்கும் அருமையானது. நன்றாய் மலவிர்த்தியாகும், வாரம் ஒரு முறை இதைக் குழந்தைகளுக்கு உபயோகித்து வரவேண்டியது. அநேக தலைமுறையாய் அனுபோகமான மருந்து.

**பல் வியாதிகள்.**

பல்வியாதி சகலத்திற்கும் எங்கள் குரு பல்பொடிக்கு நிகரானது வேறில்லவேயில்லையென்று திட்டமாய்ச் சொல்லக்கூடும். சகல தந்த நோயும் தீரும். நோய்வராமலும் பாதுகாக்கும் பொடி இது. புட்டி அணு 4.

☞ எங்கள் மருந்து சாலையில் சகல வியாதிக்கும் கைகண்ட அவுஷதங்கள் இருக்கிறது. எல்லாம் ஆயுள்வேத முறை கலந்த பக்குவங்கள் தான். வியாதிக்கு ஏற்ற மருந்துகள்.

☞ வியாதிகளைப் பற்றி தெரியப் படுத்தினுல் சரியான மருந்துகள் தபால் மூலம் அனுப்புவோம். விலாசம். **டாக்டர் எ. மதுரம்.**

திருச்சிறுப்பள்ளி.

---



பண்டிதர் **K. S. கிருஷ்ணசாமி** ஐயருடைய **'எலக்டிரிக்பாம்'** என்னும் சூலைநிவாரணித் தைலம். இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினுல் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு. பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்யிர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், **P. கணேசரத்னம் பிள்ளை**

கடைத்தெருவு 86 செ. கடை, சேலம் & **சர்மா & கோ,**

திருச்சிறுப்பள்ளி தெப்பக்குளம்,

இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான
இரண்டு உயர்ந்த ரத்னஔஷதங்கள்.

## மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திருடத்தையும் மேனியையுங்கொடுப்பவை

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுந்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருவவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கர்ப்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## தபும்லகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்சசிக்கும் ஆண்தண்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய மூலம் பெண்ணத்தக்க குணங்களையும் குரித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக் கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் நாங்கள் கேடாமலும், கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துக்களைப்பற்றியும் எங்கள் **வைத்திய வித்தியா** புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துககும் ஐசுவரியத்துககும் க்ஷேமத்துக்கும பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை **இனாமாக** தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

## ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

புரொப்ரைடர் ஆயுள்வேதோதய ஔஷதாலயா

No. 177, சைனபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

**பெண்சாதியால் உதடிழந்த புருஷன்:**— "நெட்டாலில் ஒரு காப்பிரி போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு நான்கு மனைவிகளிருந்தார்கள். அவன் ஒரு மனைவியைப் பார்த்துவிட்டு மற்றொரு மனைவியைப் பார்க்கப் போனபோது அவள் அன்போடு முத்தங்கொடுப்பதுபோல் பாவித்து முத்தமிட்டு அவனது உதட்டைத் துண்டாய்க் கடித்துக் கீழே துப்பி விட்டாள். இரங்கூனிலும் பத்திராதிபராக இருந்த ஒருவரை, அவர் மனைவி அரிவாள்மணையைக் கொண்டு காதை அறுத்து விட்டாள். இதெல்லாங் கலிகாலக்கொடுமையே" என்று பாண்டியன் பத்திரிகை கூறுகின்றது.

**ஒற்றுங் கேட்கலாமோ?**—ஆப்பிரிக்காவிலுள்ள டர்பனில் ஒரு அன்பன் ஒரு பெண்ணோடு பேசிக் கொண்டிருக்கும்போது, மற்றொருவன் பலகணி வழியாகத் தலையை நீட்டி அவர்கள் பேசுவதை ஒற்றுக்கேட்டானும் அக்குற்றத்திற்காகப் பத்து பவுன் அபராதம் விதிக்கப்பட்டானவன். பிறர் பேசும்போது ஒற்றுக் கேட்கலாமா? ஒற்றுக்கேட்டால் அன்பர் பேசிய விஷயத்தில் பற்றுதல் ஏற்படும். பற்றுதல் ஏற்படுமிடத்து அது சுத்தமானதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா? ஆகவே ஒற்றுக் கேட்பதைப்போல பாவம் உலகத்தில் வேறொன்றுமில்லை.

**பர்த்தாவிழந்த பதிவிரதையின் செயல்:**— டார்ட்மௌத் என்னுமிடத்திலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் டாக்டர். வி. டப்ளியூ. யெங் என்னுமொருவர் சிகிச்சையிலிருந்தார். இவரது வியாதி அதிகரிக்கவே மரணகாலமும் கிட்டிவிட்டது. இவர் இறந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் இவர் பக்கம் குற்றேவல் செய்துகொண்டிருந்த இவரது தர்மபத்தினியும் இறந்திருக்கக் காணப்பட்டாள். விஷயம் விசாரிக்கப்பட்ட காலத்துத் தம் கணவன் உயிர் நீங்கிய பின்னர் தமது பூவுலகாயுள் சந்தோஷகரமாயிருக்காதென்றெண்ணி திராவகத்தைக் குடித்து இறந்துவிட்டனளென்று தெரிந்ததாம்.

**நாகத்திற்கும் நாய்க்கும் யுத்தம்:**— சொராம்பூருக்கு அருகிலுள்ள, ஐயஸ்பூரில். ஒரு குடியானவனுடைய நாய், ஓரிரவு, தன் எஜமானன் வீட்டுச்சுவரில் ஒரு நாகப்பாம்பைக்கண்டு 15, 20 தடவை அதனோடு போராடிற்று. ஒவ்வொருதடவையும் பாம்பு, நாயைக் கொத்தினது. இந்தயுத்தம் வெகுநேரமாய் நடந்தது கடைசியில் நாய் ஊளையிடுவதைக் கேட்டு, எஜமானன் வெளியே வந்து பார்க்கும்போது, நாகமும் நாயும் இறந்து கிடந்தன. இவ்விரு ஜெந்துவின் உடலமும் 2, 3 நாள்வரை, அகற்றப்படவில்லை. விஷமேறிக் கிடந்தமையினால், கழுகு, முதலியவைகூட அண்டையில் வரவேயில்லையாம். இந்த நாயின் விசுவாசத்தை என்னென்று சொல்வது.

**கொரியா ஸ்திரீகள்:**— கொரியாதேசத்து ஸ்திரீகள் தமது முகத்தை ஆடவர் பார்க்காவாறு துணியால் மூடிக்கொள்வது வழக்கம். பெண்கட்கு விவாகம் நிச்சயமானவுடன் அவர்கள் புருஷர்களைப் பாராதிருக்குமாறு கண்ணிமைகளில் கோந்து ஒட்டிக்கொள்வது வழக்கம். நாகரீகம் மேம்பட்டுள்ள விக்காலத்திலும் இத்தேசத்தார் மௌடீக வழக்கத்தை மேற்கொண்டிருப்பது விந்தையே.

**புராதனப் பிரேதம்:**—கியூபா என்னுந் தீவில் ஓர் பாகத்தை வெட்டிய போது ஓரிடத்தில் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன் புதைக்கப்பட்ட கோரரூபமுள்ள ஒரு ஸ்திரியின் சவமும், இருபத்தி நான்கு அங்குல நீளமுள்ள ஒரு பாதமும் காணப்பட்டது. அக்காலத்தில் அங்கு பிரசன்னமாயிருந்த கெய்சர் (ஜர்மனிஅரசர்) ஆச்சரியமுற்று இது வெகு புராதன ஆச்சரியங்களிலொன்றெனச் சொன்னாராம்.

**பாடும் மணல்கள்:--** இம்மணல்கள் ஹாவாயியன் தீவுகளில்தான் விசேஷம். மேற்படி மணலை தமது இருகைகளுக்கும் நடுவில் வைத்துக்கொண்டு தட்டினால் அம்மணல்கள் ஆந்தை அலறுவதுபோல் ஓர் கீச்சுக்குரலை உண்டு பண்ணுகின்றன. ஓர் பையில் அம்மணலைப்போட்டு உலுக்கினால் நாய் குலைப்பது போல் சத்தமிடுகின்றன. இம்மாதிரியான மணல்கள் கொலராடோ வனாந்தரங்களிலும் மற்ற அபூர்வமான களிமண் நிலங்களிலும் அகப்படுகின்றனவாம. அவ்வனாந்தரங்களில் காற்றடித்தால் மேற்கூடிய மணல்கள் பட்சி பாடுவதுபோல "கீச் கீச்" என்று சத்தமிடுகின்றன.

சூக்ஷ்மக்கண்ணாடியினால் இம்மணலை பரிசோதித்துப் பார்த்தால், உருண்டை வடிவமாகயிருக்கிறது. இம்மணலைப்பற்றி சிலசாஸ்திர அனுபோகஸ்தர்களது அபிப்பிராயம் யாதெனில், இம்மணல் மேல் ஓர் வித வாயு மூடிக்கொண்டிருக்கிறதென்றும், காற்றடிப்பதனால் மேற்படி வாயு சத்தம்செய்கிறதென்பதாம். என்னே ஆச்சரியம்! கலிகால விந்தையில் இதுவுமொன்றே.

**முத்தமிடுதல்:—** அமெரிக்காவில் கணவன் தன் மனையாளைத் தினமொன்றுக்கு 10 தடவைக்குமேல் முத்தமிடக் கூடாதாம் அப்படி முத்தமிடும்போது மனையாளுடைய உத்தரவின்றி ஒருவர் முத்தமிட்டதற்கு 25 பவுன் அபராதம் விதிக்கப்பட்டாராம்.


# A VALUABLE ASSET FOR VACANCY SEEKERS.

## THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.
**Sanjeevi Row's lane [Near Little Market]**

*TRICHINOPOLY.*

**Imparts instructions in:—**

Type-writing — Book-keeping and
Shorthand — Commercial correspondence.

STUDENTS ARE COACHED UP BY SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Games:*—Special arrangements are made for games such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students passing their Examinations with distinction

*For particulars apply to:—*

**Mr. V. N. Barathy.**
*Manager.*

## சந்தாதாரர்கள்பால் வேண்டுகோள்.

ஆறுமாதகாலமாகியும் சில சந்தாதாரர்கள் பணமனுப்பாதிருக்கிறார்கள். அவர்களைச் சந்தாவை அனுப்பி உதவி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

## முறையீடு.

பத்திரிகை அனுப்புவதையெல்லாம் பெற்றுக்கொண்டிருந்தோரும், அனுப்பச்சொல்லியோரும், பத்திரிகையை 4 மாதம் வரைபெற்றுக்கொண்டிருந்து வி. பி. தபாலில் வந்த ஐந்தாவது பத்திரிகையை திருப்பிவிட்டார்கள்.

இவர்கள் பெருந்தன்மையும் பரோபகார குணமும் இருந்தவாறு மிக நன்றாய் இருக்கிறது! தமக்கு வேண்டும் வேண்டாமென்பதை 5 பத்திரிகை வரையிலும் தெரியாதிருந்து விட்டனரே. 3 பைசா செலவிட்டு ஒரு கார்டு எழுத விருப்பமில்லாதிருந்தாலும் வந்தபத்திரிகையை திருப்பிவிட்டிருந்தாலும் நன்றாயிருந்திருக்குமே. வி. பி யில் அனுப்பினபின் திருப்புவதென்பது எத்தகைய சிறப்புடையதோ அறியோம்.

பத்திராதிபர்.


"பாலச்சந்திரிகா"

இது ஒரு அருமையான தமிழில் எழுதிய குழந்தைவைத்திய புஸ்தகம். வயித்தியர்களின் உதவியின்றியே தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை நோய்வராமற் காத்துக்கொள்ளலாம். இது ஒவ்வொரு தாய்மாரின் கையிலும் அவசியம் இருக்கவேண்டியது. இது பல பெரியோர்களாலும் டாக்டர்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. முதல் பதிப்பு அநேகமாகச் செலவாகிவிட்டது. பத்திரிகைகளிலெல்லாஞ் சிறப்பாகப்புகழும் பெற்றிருக்கிறது.

**V. P. Aiyer.**
*Belief Rilief Medical Hall Trichy.*